## ***பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறு***

## **இரண்டாவது திருவழிபாடு ஆண்டு**

## **2024-04-28**

(*இன்றைய வாசகங்கள்:*

*திருத்துதர் பணிகள் நூலிலிருந்து வாசகம்.* 9: 26-31,

*திருப்பாடல்கள்* 22: 25b-26. 27,29. 30-31 (*பல்லவி:* 25a),

*திருத்தூதர் யோவான் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்.* 3:18-24,

*யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 15: 1-8)

### ***திருப்பலி முன்னுரை***

*இறைவனில் இனியவர்களே, திராட்சைச் செடியாம் இயேசுவின் பெயரால், பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறு திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் வரவேற்கிறோம். நமது வாழ்வு இறைவனோடு இணைந்ததாக இருக்க வேண்டுமென்று இன்றைய திருவழிபாடு நமக்கு நினைவூட்டுகிறது. திராட்சைச் செடியாகிய இயேசுவோடு இணைந்த கொடிகளாக இருந்து, பலன் தருமாறு நாம் அழைக்கப்பட்டுள்ளோம். இறைவனின் அழைப்பை உணர்ந்தவர்களாய், இறையன்பில் நிலைத்து வாழும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*அன்பு தந்தையாம் இறைவா!*

*உம்மால் திருஅவையின் பணிகளுக்காக தேர்ந்து கொள்ளப்பட்ட திருப்பணியாளர்கள் அனைவரும் இறையாட்சியின் மதிப்பீடுகளுக்கு ஏற்ப திருஅவையை வழிநடத்த வேண்டிய மனநிலையைக் கொடுத்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*தந்தையாம் இறைவா!*

*உம் மகனை எங்கள் நிலைவாழ்வாகப் பெறவும், இறைவார்த்தையை வாசித்துப் பிறருக்கு எடுத்துரைக்கவும் வேண்டிய அருளைத் தந்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அன்பின் இறைவா!*

*நாங்கள் நல்ல செடியாக வளர்ந்து, காயாக கனியாக பிறருக்கு உதவி செய்யவும். பிறரின் துன்பத்தில் உடனிருக்கவும் வேண்டிய வரமருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*உறவின் வடிவமே இறைவா!*

*இன்றைய உலகில் உறவுகள் அழிந்து கொண்டிருக்கிறது. தன்னலம் மட்டுமே கருதி வாழும் மக்களாக வாழாமல், உறவு நிலைகளைப் போற்றி அன்பு செய்து வாழ வேண்டிய அருளைத் தந்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அமைதியின் இறைவா!*

*உலகில் தீய செயல்களினால் அமைதி இழந்து, மக்கள் வாழ்கின்றனர். நீர் வழங்கும் அமைதி அனைத்து மக்களிடையேயும் தங்க வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*தோழமையின் நாயகனே இறைவா!*

*எங்கள் வாழ்க்கையில் வெறும் வெளி அடையாளங்களைத் தனித்து ஆடம்பரங்களைக் குறைத்து, ஆன்மீகத் தயாரிப்பில் எங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டிய வரம்தர வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அமைதியின் தேவனே இறைவா!*

*இயேசு தம் சீடருக்கு வழங்கிய அதே அமைதியை நாங்கள் ஒவ்வொருவரும், மற்றும் உலக மக்கள் ஒவ்வொருவரும் பெற்று மகிழ்ந்திடவும் அனைத்துக் குடும்பங்களிலும் அமைதி, ஒற்றுமை வளர்ந்தோங்கிடவும் வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*ஆயனின் கட்டளையை கடைபிடிப்போரிடம் அன்பு நிறைவடைகிறது என உணர்த்தும் ஆயனே!*

*கடுமையான வார்த்தைகளைப் பேசியதால் மனம் புண்ணாகி அவமானமாக இருக்கிறது. பல்வேறு தொல்லைகள் என்னைப் புண்ணாக்கி வேதனையால் நொந்து போகச் செய்துவிட்டது என மனம் வருந்தும் உள்ளத்தினரை அன்பு நிறைந்த வார்த்தையால் அரவணைக்கவும், உமது திருக்காயங்களுக்குள் பாதுகாப்பாக அவர்கள் வாழவும் அருள் பொழிய, இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*